Vol.21 | No. 12 | December 2017



The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்

## Happy Christmas





KKSSS, Varnam 2017 - 14.11.2017



Munchirai, Pastoral Visit - 19.11.2017



DNN, Extension Building Blessing - 30.11.2017

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
Volume 21 No :12 December 2017

# இறையருள்
# IRAIARUL



## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| மறைக்கல்வி | 05 |
| சிறுமலர் | 07 |
| இளையோர் இயக்கம் | 08 |
| அருட்சகோதரர்களிடமிருந்து... | 10 |
| உறவியம் | 11 |
| Feast and B'days | 12 |
| செங்கோட்டைச் செய்திகள் | 12 |
| மறைமாவட்டச் செய்திகள் | 13 |
| மறைவட்டச் செய்திகள் | 14 |
| திருப்பீட ஆணை | 19 |
| Bishop's Engagements | 20 |

*Editorial Board*

Patron
**His Excellency**
**Mar George Rajendran SDB**

Chief Editor
**Fr. Joseph Santhosh**

Executive Editor
**Mr. Soundara Raj**

Associate Editors
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**

Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Designed by:
**Berlin Athencod**

Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Ref. No. Priests/GR/76/2017 30 November 2017

Dears,

The liturgical year of the Syro-Malabar Church begins with the period of Annunciation. The four weeks in preparation to the feast of the Nativity of Jesus, celebrated on 25th December constitute this season. Since we practice abstinence from 1st to 25th December in preparation for Christmas, we call this period "25 days Lent". The clarion call of St John the Baptist should reverberate in our minds: "Prepare the way of the Lord, make straight his paths. Every valley shall be filled and every mountain and hill shall be made low. The winding roads shall be made straight, and the rough ways made smooth, and all flesh shall see the salvation of the God" (Lk 3:4-6). It also brings to light one of the last verses of the Book of Revelation: "Come, Lord Jesus" - Maranatha - (Rev 22:20). Thus the twenty-five days of intense preparation leads us to the celebration of Christmas.

The story of Christmas reminds us of the roles that Mary, Joseph, shepherds, angels and the three wise men played. It also recalls to our minds how there was no room at the inns and how the manger became the cradle for the Messiah. However, the heart of Christmas lies in what St John wrote: "God so loved the world that he gave his only son, so that everyone who believes in him might not perish but might has eternal life" (Jn 3:16).

Since the fall of Adam and Eve, we read in the Scriptures how God attempted to reach out to human beings in varied ways. The climax of God communicating with us in the Old Testament was when He entered into a covenant with Moses on Mount Sinai. God joined himself to us in a covenant and we were joined to God in a covenant. But we still sinned so God raised prophets to call us back but only a small number of people paid heed to the prophets. Through Hosea, God complained that Israel has been like an unfaithful wife committing adultery by going after false gods. All through the centuries of the Old Testament, God pursued us like a lover but we had broken the covenant and God had to make a new unbreakable covenant with us. For this new covenant, God became flesh and bones like us, and shed his blood in the person of Jesus to convince us once and for

all to accept his invitation to be his people. Jesus was the climax of God reaching out to us. "The Word was made flesh, he lived among us, and we saw his glory" (Jn 1:14).

Christmas is a moment of paradoxes. We see the light shining in the darkest season, the fire blazing in the cold of winter, life stirring in the fallow of the year. We participate in the paradoxes of the season when we acknowledge the infant light at the darkest point of the year. We read in the Gospel of John, "The light still shines in the darkness and the darkness has not overcome it" (Jn 1: 5). Just as the light of the sun is secretly rekindled and reborn, so are we given an opportunity for our divine spark to wax and grow in light. Christmas is a feast of the interior light, a rekindling of the spiritual spark within us, even as we see the fire blazing in the cold of winter.

In the Gospel of St Matthew 1: 23, we read: "Behold, a virgin shall be with child, and shall bring forth a son, and they shall call his name Emmanuel, which means, God with us." Let us seize the moment and allow ourselves to feel the presence of this God of ours who prefers to be with us. He comes with the message of forgiveness. He asks to forgive one another so that he can also forgive us our sins. "Forgive us our sins for we ourselves forgive everyone in debt to us" (Lk 11:4). Christmas is a time to feel that are all brothers and sisters created in the image and likeness of God. In our country, people belonging to different religions are able to live in peace and mutual understanding although communalism with its evils is raising its ugly head every now and then. Even among Christians, there are different denominations. But we need to work in tandem to bring the message of forgiveness and peace that the Lord came to give us to the people around. The prayer of Jesus at the Last Supper comes to my mind: "They may all be one, as you, Father, are in me and I you, that they also may be in us" (Jn 17: 21).

Christmas is also a time of sacrifice in that we often participate in the giving of gifts and contributing to charities at this time. The nativity and birth that we celebrate at Christmas Eve is a sacrifice as well. Jesus sacrifices the glory and light vesture of the celestial aeons in order to take on human form and dwell upon the earth. Writing to the Philippians, St Paul was able to capture it. "Christ Jesus, who, though he was in the form of God, did not regard equality with God, something to be grasped. Rather he emptied himself, taking the form of a slave, coming in human likeness: (Phi 2:6-7). There is no book, no scripture and no authority outside of one's self that is an au-

thentic source regarding the mystery of incarnation. It is a mystery that can only be witnessed individually in each one's own heart.

As we know, Christmas belongs not only to those who call themselves Christians but also to the entire world. The lowly animals, birds, plants and trees all participate in this nativity of the divine light at Christmas. An old French legend tells how all the animals were given the gift of speech on Holy Night; so that they were granted the ability to give outward expression to their consciousness and recognition of the light. Our compassion for our human brothers and sisters is increased when we realize that the animals and trees are also wondrous light-beings in even more humble, limited and unrecognizable form than ourselves.

The baby Jesus was born in a stable used to shelter animals and is laid in a manger - a humble birth for the proclaimed King of kings. We also share that humble existence in this world. We also experience the sacrifice of the glorious light of the aeons and see our light power as a tiny spark of its original flame. The holy birth at Christmas represents the birth of the Christ-Sun within us, an awakening of our consciousness to who we are and the light from whence we came, an awakening from the sleep of forgetfulness. As the Christmas is nearing, let us experience the birth of Christ in our hearts.


CONCLUSION

With grateful hearts for the numerous blessings that God has showered upon us, especially the beatification of Venerable Rev. Sr. Rani Maria, let us begin the holy season of 25 days fast. As mentioned at the beginning of this letter, the profound prayer of this season should be Maranatha! Come, Lord Jesus! It is also a time for looking both backward and forward. We look backward as we prepare to celebrate the historical birth of Jesus. At the same time, we look forward to the 'Second Coming' of Jesus as we get ourselves ready to welcome him into all the areas of our lives during this season.

Although there will be occasions when we can personally wish one another during this month, still let me, through this letter, wish you, dear Fathers, a Merry Christmas and a God-filled New Year 2018. May you have a faith experience of the Babe of Bethlehem as you prepare to celebrate Christmas!

With my prayers and blessings,

Yours in Christ Jesus,



+George Rajendran SDB

Bishop of Thuckalay



# CATECHISM மறைக்கல்வி

“தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும், யூதேயா சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள்.” (தி.ப 1:8)

## தலைமையாசிரியர்களின் கூடுகை

மறைக்கல்வி தலைமையாசிரியர்கள் கூடுகை அக்டோபர் 28 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அலுவலகத்தில் வைத்து துணை இயக்குநர் அருட்தந்தை ரிட்டோ அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் விவிலிய கலைவிழா போட்டிகள், நிபந்தனைகள் மற்றும் போட்டியாளர்களுக்கான பெயர் படிவம் வழங்கப்பட்டது. தனிநபர் போட்டிகளில் ஒரு மாணவர் அதிகபட்சமாக இருபோட்டிகளில் பங்கேற்கலாம் என்றும் இவ்வாண்டு முதல் மறைமாவட்ட அளவில் தபேலா, வயலின், கிபோர்டு ஆகிய இசைக்கருவி போட்டிகள் நடத்தப்படும் என்றும் அதற்காக பங்குகளிலிருந்து எத்தனை மாணவர்கள் வேண்டுமானாலும் பங்கேற்கலாம் என்றும் இயக்குநர் அவர்கள் கூறினார். இவ்வாண்டு 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான செயல்முறை திட்டமாக (PROJECT) 5 உறவியங்களை பார்வையிட்டு அதன் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கூறினார். அனைத்து மறைக்கல்வி நிலையங்களுக்கும் முதல்பருவ வினாத்தாட்கள் வழங்கப்பட்டது.

## முதல் பருவத் தேர்வு

அக்டோபர் 29 ஞாயிற்றுக் கிழமையன்று அனைத்து மறைக்கல்வி நிலையங்களிலும் முதல் பருவத்தேர்வு நடைபெற்றது,

## எழுத்து, வரைதல் போட்டிகள்

விவிலியக் கலைவிழா எழுத்துப் போட்டிகள் மறைவட்ட அளவில் அக்டோபர் 22 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிமுதல் 4.30 மணிவரை அந்தந்த மறைவட்டடங்களில் மறைவட்ட இயக்குநர்கள் தலைமையில் நடைபெற்றது.

## ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

தக்கலை பிலாங்காலை மறைவட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நவம்பர் 5 அன்று காட்டாத்துறை புனித மிக்கேல் மேனிலைப்பள்ளியில் வைத்து அருட்தந்தை அனில்ராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

படந்தாலுமூடு மறைவட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நவம்பர் 12 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பேரருட்தந்தை றோபின்ஸ் குழிகோடில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது

இருமறைவட்ட கருத்தரங்கிலும் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் குமரி மிஷன் மற்றும் செங்கோட்டை மிஷன் தொடக்கம் பற்றியும், இயக்குநர் அருட்தந்தை அலக்ஸ் புத்தேட்டு அவர்கள் திருச்சபையின் வரலாறு பற்றியும், அருட்தந்தை ஜாண் ஜோசப் அவர்கள் தனிச்சபைகள் மற்றும் ஆராதனை முறைகள் பற்றியும், அருட்தந்தை பிரிண்டோ அவர்கள் ஆன்மீக வாழ்வில் ஆசிரியர்களின் பங்கு பற்றியும் வகுப்புகளை நடத்தினார்கள். இருமறைவட்ட ஆசிரியர்களும் பங்கேற்று சிறப்பித்தனர். இதற்காக ஒத்துழைத்த மறைவட்ட இயக்குநர்கள், பயிற்சிக்கு அனுப்பி வைத்த பங்குத்தந்தையர்கள், தலைமையாசிரியர்கள், பயிற்சியை வழிநடத்தியவர்கள் மற்றும் பங்கேற்ற ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றி.

**ஊக்குவிப்பாளர் கூடுகை**

11.11.2017 அன்று கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் மறைக்கல்வி இயக்குநர் அருட்தந்தை அலக்ஸ் புத்தேட்டு அவர்கள் தலைமையில் தொடக்க செபத்துடன் ஊக்குவிப்பாளர் கூடுகை ஆரம்பமானது. செயலர் திரு. கிறிஸ்துதாஸ் அவர்கள் அனைவரையும் வரவேற்க, கடந்த கூடுகை அறிக்கை சமர்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. முதல் பருவ பார்வை அறிக்கை சமர்பிக்கப்பட்டது. பிரிவுகள் வாரியாக நடத்தப்பட்டு வரும் போட்டிகள் முன்பு போலவே தொடர்ந்தும் நடைபெறும் என்றும், முதல் பருவ ஆய்வை நிறைவு செய்யாதவர்கள் உடனடியாக நிறைவு செய்யவும் இயக்குநர் தந்தை அவர்கள் கேட்டுக்கொண்டார். மறைவட்ட அளவில் நடைபெறும் போட்டிகளுக்கு ஊக்குவிப்பாளர் தலா ஒருவர் பார்வையாளராக நியமிக்கப் பட்டனர். தொடர்ந்து இறுதி செபத்துடன் கூடுகை நிறைவு பெற்றது. துணை இயக்குநர் அருட்தந்தை ரிட்டோ அவர்களும் உடனிருந்தார்.

**கலைப்போட்டிகள் நடைபெறும் விபரம்**

| மறைவட்டம் | நாள் | இடம் |
|---|---|---|
| தக்கலை பிலாங்காலை | 26/12/2017 | காட்டாத்துறை |
| படந்தாலுமூடு | 27/12/2017 | படந்தாலுமூடு |
| சூசைபுரம் | 27/12/2017 | சூசைபுரம் |
| மஞ்சாலுமூடு | 28/12/2017 | முக்கூட்டுக்கல் |
| ஆறுகாணி | 29/12/2017 | ஆறுகாணி |
| நித்திரவிளை | 30/12/2017 | வாறுதட்டு |

அருட்தந்தை அலக்ஸ் புத்தேட்டு | இயக்குநர்

சிறுமலர் MISSION LEAGUE

# சிறுமலர் மிஷன் லீக்

**பொறுப்பாளர் கூடுகை**

07.10.2017 அன்று பொறுப்பாளர்கள் கூட்டம் மதியம் 2 மணிக்கு கல்லுவிளையில் வைத்து ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இயக்குநர் அருட்தந்தை ஷோஜோ அவர்கள் அனைவரையும் வரவேற்க, செயலர் அறிக்கை சமர்ப்பித்தார். பின்னர் பொறுப்பாளர்கள் இயக்கத்தின் வளர்ச்சி தளர்ச்சி, தொடக்கத்தில் மக்கள் கொண்ட விசுவாசமும், விசுவாசமின்மையும் பற்றிய கருத்துக்களை கூறினர். தொடர்ந்து ஆயர் அவர்கள், மறைக்கல்விக்கு அடுத்தப் படியாக திருச்சபைக்கு வலுவூட்டுவது மிஷன்லீக், இது சீரோ மலபார் திருச்சபையின் தனி சொத்து. இதன் வழியாகவே இறையழைத்தல்களை உருவாக்க முடியும். ஆகவே, பெயரளவில் நின்று விடாது முழுமூச்சுடன் செயல்படல் வேண்டும் என்று உரையாற்றினார். தொடர்ந்து சிறுமலர் மாத இதழ் பற்றி விவாதிக்கப்பட்டது. அதன்படி முக்கியமாக 3 கருத்துகள் தீர்மானிக்கப் பட்டது.

1. சீரோமலபார் சபை வரலாறு, மறைபரப்பு தளங்களின் வளர்ச்சி மற்றும் புனிதர்களின் வரலாறு ஆகியவை அதிகமாக இடம்பெறல் வேண்டும்.
2. பங்கு, மறைவட்ட அளவில் குறைந்த பட்சம் 3 முறையாவது சிறப்பு கூடுகை வழி ஊக்குவித்தல்
3. சொந்தமாக செபிக்க பழக்கப்படுத்துவதோடு நற்செயல், நற்பழக்கவழக்கங்கள் பின்பற்றவும் கற்றுகொடுத்தல்.

**70ஆம் ஆண்டு நிறைவு விழா**

சிறுபுஷ்ப மிஷன்லீக் தொடங்கியதன் 70 ஆண்டு நிறைவையொட்டி நிறைவுவிழா மற்றும் பேரணி கர்நாடகா மாநிலத்தின் பெல்தங்காடி மறைமாவட்டத்தில் வைத்து 21.10.2017 சனிக்கிழமை நடைபெற்றது. தமிழக மண்டலத் தலைவர் திரு. ஞானதாஸ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். நமது மறைமாவட்ட பொறுப் பாளர்கள், தேசிய பொறுப் பாளர்கள், மறைமாவட்ட துணை இயக்குநர் அருட்தந்தை ஜோஸ் வயலில் உட்பட 10 பேர் கலந்து கொண்டனர்.

அருட்தந்தை ஷோஜோ|இயக்குநர்

## தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

### முப்பெரும் விழா

மறைமாவட்ட தினவிழாவோடு 11.11.2017 அன்று நடைபெற்ற முப்பெரும் விழா நிகழ்ச்சியை இளையோர்கள் தொகுத்து




வழங்கியதோடு, விழாவில் சிறப்பு நிகழ்ச்சியாக சமூகத்தில் நடைபெறும் அவலங்களை வீதி நாடகமாக (Street play) மேடையில் நடித்து காண்பித்தனர். இந்நிகழ்வு அனைவரையும் சிந்திக்க வைத்ததாக தெரிவித்தனர். 30க்கும் மேற்பட்ட இளைஞர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### வர்ணம்

குழந்தைகள் தினமான நவம்பர் 14 அன்று பள்ளி மாணவர்களுக்கு வர்ணம் என்னும் போட்டியை கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் நடத்தி வருகிறது. போட்டியின் இறுதியில் மாணவர்களை உற்சாகப் படுத்தும் விதமாக இவ்வாண்டு 1 மணிநேர கண்கவர் கலைநிகழ்ச்சிகள் இளைஞர் இயக்கத்தினரால் ஒருங்கிணைத்து நடத்தப்பட்டது. மதியம் 12 மணிக்கு போட்டி நிறைவடைய இளைஞர் இயக்கத்தினர் பறை இசை முழங்கி வரவேற்றனர்.



சகோதரர் ஜெசின் அவர்கள் நிகழ்வை தொகுத்து வழங்கினார். தொடர்ந்து இளைஞர்களின் மேற்கத்திய நடனம் மற்றும் தமிழர்களின் கலாச்சார நடனங்களான தப்பாட்டம் மற்றும் ஒயிலாட்டம் போன்ற நிகழ்ச்சிகளை நடத்தி மாணவர்களை உற்சாகப்படுத்தினர். நிறைவில் கன்னியாகுமரி சமூக சேவை சங்க இயக்குநர் அருட்தந்தை சஜி அவர்கள் இளையோர் இயக்கத்தினருக்கு பாராட்டும் நன்றியும் தெரிவித்தார்.

### மஞ்சாலுமூடு மறைவட்ட இளையோர் பயிற்சி

தக்கலை மறைமாவட்ட இளைஞர் இயக்கத்தினருக்கான திறன் வளர் மற்றும் தலைமைத்துவப் பயிற்சி

நடைபெற்று வருகிறது. இப்பயிற்சி அனைத்து இளைஞர்களுக்கும் பயன்பெற வேண்டும் என்பதற்காக மறைவட்ட அளவிலும் நடத்த திர்மானிக்கப்பட்டது. அதன்படி முதற்கட்டமாக மஞ்சாலுமூடு மறைவட்ட இளையோருக்கான பயிற்சி மஞ்சாலுமூடு சிறுமலர் மறைவட்ட ஆலயத்தில் அக்டோபர் 25 இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில்



நடைபெற்றது. அன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமான இப்பயிற்சியில் 3 பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்பட்டது. குறும்படம் இயக்குதல், நடித்தல், புகைப்படம் எடுத்தல், ஒளிப்பதிவு ஆகிய பயிற்சிகளை சங்னனாச்சேரி ஊடகவியல் துறை ஆசிரியர்களும், நாட்டுப்புற கலைப் பயிற்சிகளை களரி கலைப்ப யிற்சி மையத்தினரும், பேச்சுப் பயிற்சியை இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்களும் அளித்தனர். குறும்படப் பயிற்சி பெற்றவர்கள் ‘தோல்வியும் கடந்து போகும்’ என்ற குறும்படத்தை எழுதி, இயக்கி, நடித்து அதன் சிறு பகுதியை வெளியிட்டனர். கலைப்பயிற்சி பயின்றோர் லெசீம் நடனமாடினர்.

**புதிய பொறுப்பாளர்கள்**

பயிற்சிக்கு பின் 4 மணியளவில் பயிற்சி பற்றி ஆலோசனை நடைபெற்றது. இக்கூட்டத்தில் மஞ்சாலுமூடு மறைவட்ட பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவராக ஜினோ மஞ்சாலுமூடு,




துணைத்தலைவராக வர்ஷா காரோடு, செயலராக பென்சி மஞ் சாலுமூடு, இணைச்செயலராக சந்திப் மாலைக்கோடு, பொருளராக ஜெறின்லால் முக்கூட்டுக்கல் ஆகியோர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பின்னர் இரவு 6 மணி முதல் 7.30 மணி வரை ஆராதனை நடைபெற்றது. ஆராதனைக்குப் பின் கேம்ப் பயர் நடைபெற இரவு 8.30 மணிக்கு இரவுணவுடன் இனிதே நிறைவடைந்தது. இதற்கான ஏற்பாடுகளை மஞ் சாலுமூடு மறைவட்ட பங்குத்தந்தை அருட்தந்தை அகஸ்டின் தலோடில் அவர்கள் செய்திருந்தார்.

செல்வி. பபிஷா| செயலர்.

## அருட்சகோதரர்களிடமிருந்து...




களப்பணியாற்றும் அருட்சகோதரர்கள் மகேஷ், ஜோஸ், சுனில் ஆகியோர்களுக்கான ஆண்டு தியானம் நவம்பர் மாதம் இறுதி வாரத்தில் நிறைவு பெற்றது.

இதுவரை மஞ்சாலுமூடு சிறுமலர் மறைவட்ட ஆலயத்தில் களப்பணியாற்றிய அருட்சகோதரர் ஜோஸ் அவர்கள் நவம்பர் 1 முதல் சங்கமத்தில் களப்பணியை தொடர்ந்து வருகிறார்.

நவம்பர் 2 அன்று ஆயர் அவர்கள் உஜ்ஜயினில் பயின்று வரும் அருட்சகோதரர்களை சந்தித்து உரையாடினார்.

கிறிஸ்மஸ் விடுமுறைக்காக வடவாதூர், குந்நோத், வாரங்கல், ஆலுவா, பெங்களூர், திருச்சர் குருத்துவக் கல்லூரிகளில் பயிலும் அருட்சகோதரர்கள் டிசம்பர் 23 அன்று மறைமாவட்டத்திற்கு வருகை தருவார்கள். அன்றைய தினம் சங்கமத்தில் வைத்து மதியம் 12 மணிக்கு அருட்சகோதரர்களின் கிறிஸ்துமஸ் கூடுகை ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

இளங்குருமட முதலாண்டு மற்றும் நான்காமாண்டு மாணவர்கள் மேய்ப்புப்பணி அனுபவத்திற்காக இருநாட்கள் பல்வேறு பங்குகளில் அனுப்பப் பட்டுள்ளனர். நான்காமாண்டு மாணவர்கள் செங்கோட்டை திருத்தொண்டுதளத்தில் தங்கள் மேய்ப்புப் பணி அனுபவத்திற்காக சென்றுள்ளனர்.

அருட்சகோதரர் டொராதிக் அவர்களின் திருத்தொண்டர் அருட்பொழிவு டிசம்பர் 8 மாலை 5 மணிக்கு சங்கமத்தில் நடைபெறும்.

அருட்சகோதரர் டோஜி
தலைவர்

---

## வரவிருக்கும் நிகழ்வுகள்

| | |
|---|---|
| டிசம்பர் 04 | அருட்தந்தை தோமஸ் உறும்பைக்கல் அவர்களின் முதலாண்டு நினைவு |
| டிசம்பர் 10 | செண்பகத்தரிசு மறைபரப்பு தள தொடக்கம் |
| டிசம்பர் 14 | அருட்தந்தை தோமஸ் தெக்கேல் அவர்களின் நினைவு |
| டிசம்பர் 19 | அருட்தந்தையர்களின் கிறிஸ்துமஸ் கூடுகை |
| டிசம்பர் 28 | வட்டக்கோட்டை மறைபரப்பு தள மந்திரிப்பு |
| டிசம்பர் 29 | பிலாங்காலை சிறுமலர் ஆலய அர்சிப்பு |

# உறவியச் செய்திகள்

பங்களவில் உறவியங்கள் சிறப்புடன் செயல்பட உதவிடும் நோக்கில், மறைமாவட்ட அளவில் சிறப்புக் குழுவானது ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழுவின் பொறுப்பாளர்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| இயக்குநர் | அருட்தந்தை ஜோஷி குளத்தும்கல் |
| துணை இயக்குநர் | திருத்தொண்டர் ஜெபனேஷ் |
| நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் | அருட்சகோதரி அமலா |

இவர்களுடன் இணைந்து செயல்பட ஒவ்வொரு மறைவட்டத் தளங்களிலிருந்தும் ஒரு அருட்சகோதரி வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| நித்திரவிளை | அருட்சகோதரி எல்ஸீனா ASMI |
| படந்தாலுமூடு | அருட்சகோதரி அனுபா FCC |
| ஆறுகாணி | அருட்சகோதரி லிஸா SH |
| மஞ்சாலுமூடு | அருட்சகோதரி அனு SH |
| தக்கலை பிலாங்காலை | அருட்சகோதரி ஆன்ஸ் மரியா CMC |
| சூசைபுரம் | அருட்சகோதரி விமலா SABS |

புதிய பொறுப்பாளர்களின் முதல் கூடுகையானது 15.11.2017 அன்று கல்லுவிளை மறைக்கல்வி நிலையத்தில் மதியம் 3.00 மணி அளவில் ஆயர் தலைமையில் நடைபெற்றது. ஆயர் அவர்கள் உறவியங்கள் சிறப்புடன் செயல்பட பல்வேறு வழிவகைகளைச் சுட்டிக் காட்டினார்கள். கலந்துரையாடலுக்குப் பின், சில செயல்திட்டங்கள் வகுக்கப்பட்டன.

அதன்படி இயக்குநர் அருட்தந்தை ஜோஷி குளத்தும்கல் அவர்கள் படிப்படியாக உறவியங்கள் ஒருங்கே அமைய நாம் சேர்ந்து உழைக்க வேண்டுமென்று வலியுறுத்தி, பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தினார். முதற்கட்டமாக மறைமாவட்டத்தில் எத்தனை உறவியங்கள் செயல்படுகின்றன என்ற பட்டியலும், உறவிய பொறுப்பாளர்களின் பெயர் பட்டியலும் பெற தீர்மானிக்கப்பட்டது. மேலும் அருட்சகோதரி ஒருவரை உறவிய வழிகாட்டியாக தேர்ந்தெடுக்க திட்டமிடப்பட்டது. இவ்விவரங்கள் டிசம்பர் 3ம் தேதிக்குள் இயக்குநரிடம் ஒப்படைக்க அறிவுறுத்தப்பட்டது.

உறவியங்கள் சிறப்புற அமைய அனைத்து அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள், இறைமக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு விழா நல்வாழ்த்துகள்.

அருட்தந்தை ஜோஷி குளத்தும்கல் | இயக்குநர்

## செங்கோட்டைச் செய்திகள்

**மிஷன்லீக் றாலி**

15.10.2017 அன்று தக்கலை மறைமாவட்ட அளவில் நடைபெற்ற மிஷன் லீக் றாலியில் செங்கோட்டை மறைபரப்பு தளத்தின் அனைத்து பங்குகளிலிருந்தும் உறுப்பினர்கள் பங்கேற்றனர். அவர்களுடன் அருட் தந்தையர்கள் மற்றும் அருட்சகோ தரிகளும் கலந்து கொண்டனர். மாணவர்களை உற்சாகப்படுத்தும் வகையில் ஆயர் அவர்கள் ஊக்கப் பரிசு வழங்கினார்.

**செபமாலை திருப்பவனி**

22.10.2017 அன்று செங்கோட்டை மறைபரப்பு தளத்தின் சார்பில் மேக்கரை பங்கில் வைத்து செபமாலை கொண்டாட்டம் நடை பெற்றது. மாலை 3.30 மணியளவில் திருப்பலியுடன் ஆரம்பமானது. தொடர்ந்து செபமாலை திருப்பவனி நடைபெற்றது. அருட்தந்தை ஜாண்பால் அவர்கள் புனித கன்னிமரியாவின் சிறப்பு இயல்புகள் பற்றி எடுத்துரைத்தார். இதில் அனைத்து பங்குகளிலிருந்தும் குருக்கள், அருட்சகோதரிகள் மற்றும் இறைமக்கள் அனைவரும் பங்கேற்று சிறப்பித்தனர்.

அருட்தந்தை ஜாண்பால் | ஒருங்கிணைப்பாளர்

| DECEMBER | BIRTHDAY OF REV. FATHERS |
|---|---|
| 18 | FR. JOSEPH ANITHOTTAM CMI |
| 18 | FR. ANTONY JOSE |
| 26 | FR. RONY PEEDIKAYIL MCBS |
| 26 | FR. MATHEUS ROBERT |
| **DECEMBER** | **FEAST DAY OF REV. FATHERS** |
| 27 | FR. JOHN THEKKEL |
| 27 | FR. JOHN PAUL |
| 27 | FR. JOHN CHIRAYIL CMI |
| 27 | FR. JOSHY KULATHUMKAL |

**பொதுநிலையினருக்காக இறையியல் வகுப்பு**

பொதுநிலையினருக்காக ஓராண்டு இறையியல் கருத்தியல் வகுப்புகள் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் இயக்குநராக அருட்தந்தை கிறிஸ்துதாஸ் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.




# மறைமாவட்டச் செய்திகளும் நிகழ்வுகளும்

மறைமாவட்ட **முப்பெரும் விழா**

21வது மறைமாவட்ட தினம், சீரோ மலபார் பேராலய ஜூபிலி மற்றும் மறைமாவட்ட எல்லை




விரிவாக்கம் ஆகிய முப்பெரும் விழா நவம்பர் 11 அன்று கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் நடைபெற்றது. காலை 9.30 மணிக்கு ஆயர் அவர்கள் தலைமையில் திருப்பலியுடன் ஆரம்பமானது. தொடர்ந்து நடைபெற்ற முப்பெரும்விழா பொதுக்கூட்டத்திற்கு சங்னைாச்சேரி உயர் மறைமாவட்ட துணை ஆயர் மார் தோமஸ் தறயில் அவர்கள் தலைமை தாங்கி தலைமையுரையாற்றினார். ஆயர் அவர்கள் அனைவரையும் வரவேற்க, மறைமாவட்ட செயலர் பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அறிக்கை சமர்ப்பித்தார். மேலும் இந்நிகழ்வில் அருட்சகோதரி பெர்க்மான்ஸ் எஸ்.எச், திருமதி சாலம்மாள் முஞ்சிறை ஆகியோர்களின் திருத்தொண்டுப் பணியை பாராட்டி, குருகுல முதல்வர் வாழ்த்திப் பேசினார். பின்னர், ஆயர் அவர்கள் பொன்னாடை அணிவித்து கவுரவித்து, நினைவுப் பரிசு வழங்கினார். மறைவட்டங்கள் மற்றும் பக்த இயக்கங்கள் சார்பில் பல்வேறு கலைநிகழ்வுகளும் நடைபெற்றது. மதியம் 1.30 மணியளவில் அன்பின் விருந்துடன் விழா நிறைவடைந்தது.

**கூடுதல் கட்டிட மந்திரிப்பு**

காரோடு தேவசகாயம் நல்வாழ்வு நிலையத்தில் கட்டப்பட்ட கூடுதல் கட்டிடத்தின் மந்திரிப்பு நவம்பர் 30 அன்று நடைபெற்றது. ஆயர் அவர்கள் வருகை தந்து திருப்பலி நிறைவேற்றி புதிய கட்டிடத்தை மந்திரித்து திறந்து வைத்தார். இக்கட்டிடம் அமைக்க முழுமுயற்சி எடுத்த இயக்குநர் அருட்தந்தை வினோத் மற்றும் பொருளாதார உதவி வழங்கிய அனைவருக்கும் நன்றி. மழை மற்றும் புயல் காரணமாக அன்று நடைபெற இருந்த தேவசகாயம் நல்வாழ்வு நிலைய 11வது ஆண்டுவிழா ரத்து செய்யப்பட்டது.

# மறைவட்ட செய்திகள்




## நித்திரவிளை மறைவட்டம்

### புனித ஜார்ஜியார் திருத்தலம்

முஞ்சிறை புனித ஜார்ஜியார் திருத்தலத்தில் ஆயர் அவர்களின் மேய்ப்புப் பணி ஆய்வு (Pastoral Visit) 19.11.2017 அன்று காலை 7.30 முதல் மாலை 4.50 மணி வரை நடைபெற்றது. பங்கின் சார்பில் மேதகு ஆயர் அவர்களுக்கு வரவேற்பு நல்க, ஆயர் அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார். மறையுரையின் போது "அகில உலகத் திருச்சபை, உலக ஏழைகள் தினம் கொண்டாடும் இந்நாளில் நானும் உங்களை சந்தித்து உங்களோடு ஒருவனாக இருந்து திருப்பலி நிறைவேற்றுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஏழைகளை நோக்கி உங்கள் பார்வை செல்ல வேண்டும். இந்நாளில் நமது அன்பு, வார்த்தையில் மட்டுமல்ல, செயல்பாடுகள் ஒவ்வொன்றிலும் வெளிப்படவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

பின்பு ஒவ்வொரு பக்த இயக்கங்களையும் பார்வையிட்டு, திருப்பலி மற்றும் பக்த இயக்கங்களின் செயல்பாடுகளில் முழுமனதுடன் ஈடுபடவும் அறிவுரை கூறினார். அதோடு பக்த இயக்கங்கள், சீரோ மலபார் திருச்சபையைக் கட்டி எழுப்பும் தூண்களாக மாறவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். தொடர்ந்து மதியம் 12.30 மணி முதல் 1 மணி



வரை நடைபெற்றது. நண்பகல் 1 மணியளவில் பங்குமக்களின் நீண்டகால கனவான கொடிமரம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டி செபித்தார். தொடர்ந்து அன்பின் விருந்தும் வழங்கப்பட்டது.

### படுக்கை நோயாளிகள் சந்திப்பு

ஆயர் அவர்களும் வின்செந் தியர்களும் இணைந்து பங்கிற் குட்பட்ட படுக்கை நோயாளிகளின் இல்லம் சென்று அவர்களுக்காக செபித்து ஆசி வழங்கினார். நிறைவாக, மாலை 4.50 மணியளவில் ஆலயத்திற்கு வருகை தந்த ஆயர் அவர்களை பங்கு மக்கள் அனைவரும் நன்றிகூறி வழியனுப்பி வைத்தனர்.

### தூய்மை கருத்தரங்கு

காந்தியடிகள் பிறந்த தினத்தை முன்னிட்டு 02.10.2017 அன்று திருப்பலிக்குப் பின் பங்குமக்களும் மறைக்கல்வி

இயக்கத்தாரும் இணைந்து ஆலயம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளை சுத்தப்படுத்தினர். தொடர்ந்து அருட்சகோதரி தீபா எஸ்.டி அவர்கள் தூய்மை என்ற மையச் சிந்தனையின் அடிப்படையில் உடல், உள்ள, ஆன்ம தூய்மையை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்றும், "புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை வாய்மையால் காணப்படும்" என்ற வள்ளுவரின் வார்த்தை புலப்படுத்தும் வண்ணம் வகுப்பு நடத்தினார்.

**மாதா வணக்கம்**

அக்டோபர் மாதம் மாதா வணக்கத்துக்குரிய மாதமாகும்.

முஞ்சிறை திருத்தலத்தில் அக்டோபர் 8 முதல் 15 வரை சிறப்புத்திருப்பலி, செபமாலை மற்றும் திருப்பவனி ஆகியவை நடை பெற்றது. ஒவ்வொரு நாளும் பக்த இயக்கங்கள் மற்றும் உறவியங்கள் இந்நிகழ்வுகளை சிறப்பித்தன.

நித்திரவிளை ஜெயமாதா மறைவட்ட ஆலயத்தில் அக்டோபர் 20 முதல் 29 வரை 10 நாட்கள் நடைபெற்றது. நிறைவு நாளன்று எரியும் மெழுகுவர்த்தி பவனி நடைபெற்றது. இனிப்பும் வழங்கப்பட்டது.

வயலின்கரை புனித அந்தோணியார் ஆலயத்தில் அக்டோபர் 23 முதல் 31 வரை 9 நாட்கள் நடைபெற்றது. நேர்ச்சை இனிப்பும் வழங்கப்பட்டது.

வாறுதட்டு சவேரியார் ஆலயத்தில் அக்டோபர் 5 முதல் 14 வரை 10 நாட்கள் செபமாலை, திருப்பவனி, திருப்பலி நடைபெற்றன. நிறைவு நாளன்று நேர்ச்சை கஞ்சியும் வழங்கப்பட்டது.

கிறிஸ்துராஜபுரம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் அக்டோபர் 14 அன்று காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை செபமாலை, புகழ்மாலை, ஒப்புரவு வழிபாடு, தியானம் ஆகியன நடைபெற்றன.

சீனிவிளை அமல மரியா ஆலயத்தில் 20.10.2017 முதல் 30.10.2017 வரை 10 நாட்கள் திருப்பலி மற்றும் செபமாலையும் நடைபெற்றன, நேர்ச்சை இனிப்பும் வழங்கப்பட்டது.

**கிறிஸ்து அரசர் திருவிழா**

கிறிஸ்து அரசர் திருவிழா 20.11.2017 அன்று பங்குத்தந்தை அருட்தந்தை லின்ஸ்லால் அவர்கள் தலைமையில் திருக் கொடியேற்றத்துடன் ஆரம்ப மானது. அருட்தந்தை மிஜோ அவர்கள் திருப்பலி நிறைவேற் றினார். முதல் மூன்று நாட்கள் நற்செய்திப்பெருவிழா மற்றும் 4, 5 நாட்களில் பக்த இயக்கங்களின் ஆண்டுவிழாவும் நடைபெற்றது. ஆறாம் திருநாளன்று ஆயர் அவர்கள் தலைமையில் முதல் திருவிருந்து மற்றும் உறுதிபூசுதல் திருநிகழ்வும் நடைபெற்றது. நிறைவுநாளான

26.11.2017 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்கள் தலைமையில் இராசைத் திருப்பலி, கிறிஸ்து அரசர் திருப்பவனி, அன்பின் விருந்தும் நடைபெற்றன. தொடர்ந்து திருக்கொடியிறக்க, இளைஞர் இயக்க ஆண்டுவிழாவுடன் நிறைவடைந்தது.

**புனித அந்தோணியார் ஆலயம்**

வயலின்கரை பகுதியிலுள்ள ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை பெருக்கி, குடும்பங்களை வளமிக்கதாக மாற்றியமைக்கும் நோக்குடன் ஏஞ்சல் சாரிட்டபிள் டிரஸ்டு என்னும் அமைப்பின் கீழ் செயல்படும் அற்புதர் கார்மென்ட்ஸ் தையல் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு நிறுவனம் தொடங்கப்பட்டது. இதை 19.11.2017 அன்று ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் மந்திரித்து தொடங்கி வைத்தார். பங்குத்தந்தை பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம், பங்குமக்கள் மற்றும் ஏஞ்சல் டிரஸ்டின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

**உலக ஏழைகள் தினம்**

அகில உலக திருச்சபை 19.11.2017 அன்று உலக ஏழைகள் தினமாக அறிவித்ததை முன்னிட்டு நமது மறைமாவட்டத்திலும் உலக ஏழைகள் தினம் கொண்டாடப்பட்டது. ஆயர் அவர்கள் நித்திரவிளை மறைவட்டத்திற்குட்பட்ட அனைத்து ஏழைகளையும் சந்தித்து, வாழ்த்து கூறி பரிசுகள் வழங்கி அவர்களோடு மாலை சிற்றுண்டி உண்டு மகிழ்ந்தார். இந்நிகழ்வுகளை கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் அருட்தந்தை சஜி மற்றும் அருட்சகோதரர் மகேஷ் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

## படந்தாலுமூடு மறைவட்டம்

**நன்றியறிதல் திருப்பலி**

வாழ்த்தப்பட்ட இராணி மரியா அவர்களின் நன்றியறிதல் விழாவானது மறைமாவட்ட அளவில் தெற்றியோடு தூயபவுல் ஆலயத்தில் நவம்பர் 25.11.2017 அன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது.



முத்திபேறுபெற்ற இராணிமரியாவின் திருப்பண்டம் திருப்பவனியாக வருகை தர தக்கலை சான்ஜோ மாகாண இல்ல தலைவி அருட்சகோதரி சீலியா எப்.சி.சி அவர்கள் ஆயரிடம் வழங்கினார். ஆயர் அவர்களிடமிருந்து குருகுல

முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் பெற்றுக்கொண்டு திருப்பவனியாக வருகை தந்தனர். தொடர்ந்து ஆயர் அவர்கள் தலைமையில் திருப்பலியும், பொதுக்கூட்டமும் நடைபெற்றது. பொதுக்கூட்டம் குழித்துறை மறைமாவட்ட ஆயர் அவர்கள் ஜெரோம் தாஸ் வறுவேல் சசஅவர்கள் தலைமை தாங்கி தலைமையுரையாற்றினார். அருட்தந்தை ஜாண்குழந்தை, திருப்பட்டக்குழு அருட்சகோதரி ஸ்டார்லி எப்.சி.சி மற்றும் மார்த்தாண்டம், கோட்டாறு மறைமாவட்ட பிரதிநிகளும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வுகளை தெற்றியோடு பங்குத்தந்தை அருட்தந்தை ஜினு தெக்கேதலக்கல், பங்குமக்கள் மற்றும் எப்.சி.சி துறவறசபையினர் ஏற்பாடு செய்திருந்தனர். நிறைவில் அனைவருக்கும் விருந்தளிக்கப்பட்டது.

**பெயர் கொண்ட திருவிழா**

அதங்கோடு தூய மரிய கொரற்றி ஆலயத்தில் பங்குத் தந்தையின் பெயர் கொண்ட திருநாள் நவம்பர் 26 ஞாயிறன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கிறிஸ்து அரசரின் பெயர் கொண்ட அருட்தந்தை கிறிஸ்துதாஸ் அவர்களை பங்குமக்கள் பூங் கொத்து கொடுத்து வரவேற்றனர். தொடர்ந்து தந்தை அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார். திருப்பலியில் பங்குத்தந்தைக்காக சிறப்பு வேண்டுதல் செபமும் செபிக்கப்பட்டது. திருப்பலிக்குப் பின் கைக்காரர் திரு சுபாஷ் அவர்கள் அனைவரையும்




வரவேற்க, பாடகர் குழுவினர் வாழ்த்துப்பாடல் வழியாகவும், இளையோர்கள் தப்பாட்ட நடனம் வழியாகவும் வாழ்த்தினர். திரு லாரன்ஸ் அவர்கள் வாழ்த்துரை வழங்க, தந்தை அவர்கள் கேக் வெட்டி அனைவருக்கும் நன்றி கூறினார். தொடர்ந்து வாழ்த்துப் பரிசும் வழங்கப்பட்டது. அனைவருக்கும் சிற்றுண்டியும் வழங்கப்பட்டது.

## சூசைபுரம் மறைவட்டம்

**கிறிஸ்து அரசர் திருவிழா**

பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலய திருவிழா நவம்பர் 17 முதல் 26 வரை 10 நாட்கள் சிறப்பாக நடைபெற்றது. தொடக்க நாளன்று பங்குத்தந்தை பிரிண்டோ அவர்கள் திருக்கொடியேற்ற, குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் நிறைவேற்றினார். மேலும் அன்று இரவு 8 மணியளவில் இறைஇசை விருந்தும் நடைபெற்றது.

தொடர்ந்து மூன்று நாட்கள் நற்செய்திப் பெருவிழாவும், நவம்பர் 19 அன்று அருட்தந்தை டோஜி பறம்பில்பறம்பில் அவர்கள் தலைமையில் இராசைத்திருப்பலியும், இரவு 7.30 மணியளவில் அன்பின் விருந்து நடைபெற்றது. 21 அன்று உறவியங்களின் ஆண்டுவிழா, 22 அன்று கலைசாரல் நிகழ்வும், 23 அன்று பக்த இயக்கங்களின் ஆண்டுவிழாவும், 24 அன்று இளையோர்களி D4 நடனப்போட்டியும், 25 அன்று ஆடம்பரத் தேர்ப்பவனியும் நடைபெற்றன.

நிறைவு நாளன்று ஆயர் அவர்கள் வருகை தந்து புதிதாக அமைக்கப்பட்ட மரியன்னை கெபி மந்திரித்தார். தொடர்ந்து திருப்பலி மற்றும் முதல் திருவிருந்தும் நடைபெற்றது. மேலும் ஆயர் அவர்கள் வருகின்ற ஆண்டை பங்கினுடைய குடும்ப செப ஆண்டாக அறிக்கையிட்டு, திருக்குடும்ப சொருபத்தை மந்திரித்து தொடங்கி வைத்தார். அன்று மாலை மறைக்கல்வி இயக்குநர் தலைமையில் மறைக்கல்வி ஆண்டுவிழாவும் நடைபெற்றது. மறைக்கல்வி மற்றும் இளையோர்கள் பங்கேற்ற SIBES (விசுவாசக் கொண்டாட்டம்) என்ற கலைவிருந்தும் நடைபெற்றது.

**கிறிஸ் பெஸ்ட் 2k17**

கிள்ளியூர் தேவமாதா ஆலயத்தில் இளைஞர் இயக்கத்தின் சார்பில் கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு கிறிஸ் பெஸ்ட் 2k17 கலைப்போட்டிகள் 10.12.2017 அன்று காலை 9.30 மணி முதல் ஆலய வளாகத்தில் நடைபெற உள்ளது.

தகவல் சேகரிப்பு: திருமதி ஹேமா|சினேக லதா|செலின் மேரி

---

**மறைமாவட்ட தியானம்**

மழை மற்றும் புயல் காரணமாக மாற்றி வைக்கப்பட்ட 17 வது மறைமாவட்ட தியானம் 2018 பிப்ரவரி 10 மற்றும் 11 ஆகிய நாட்களில் நடைபெறும். இது தவக்காலத்தில் சிறந்த முறையில் ஆன்மீகப் பாதையில் ஆயத்தப்படுத்துவதற்கு வழிவகுக்கும்.

**இடமாற்றமும் நியமனமும்**

தக்காளிவிளை திருக்குடும்ப ஆலய பங்குத்தந்தையாக பணியாற்றி வந்த அருட்தந்தை லின்ஸ்லால் அவர்கள் அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டார்.
நவம்பர் 5 அன்று அப்பொறுப்பில் அருட்தந்தை ஜெஸ்டின் சுதிஷ் அவர்கள் நியமிக்கப்பட்டார்.

## கீழேத் திருச்சபைகளுக்கான திருப்பீடம் ஆணை

தமிழகத்தின் தென் எல்லையில் வாழ்ந்து வந்த புலம் பெயர்ந்த சீரோ மலபார் கிறிஸ்தவர்களுக்கு மேய்ப்புப் பணி புரிய வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் சங்ஙனாசேரி உயர் மறைமாவட் டத்தின் எல்லையானது விரிவாக்கப் பட்டது. சீரோ மலபார் சபையைச் சேர்ந்த திருத்தொண்டுப் பணியாளர்கள் மேற்கொண்டப் பணியானது மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பையும் பெற்றது. இதன் விளைவாக, 1996 ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட் டமும், திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்தையும் உள்ளடக்கி தக்கலை மறை மாவட்டம் உருவாக்கப் பட்டது. சூழலுக்கு ஏற்றவாறு, மேலே குறிப்பிட்ட பகுதிகளில் வாழும் இறைமக்கள் அவரவர் சார்ந்திருக்கும் தனித் திருச்ச பைக்குரிய ஆயரின் கீழ் இணைந்து வாழ்ந்து, அருட்பணியைப் பெற்று வருகின்றனர். இச்சூழலில், தக்கலை மறைமாவட்டத்தின் எல்லையை, இராமநாதபுரம் மறைமாவட்டத்தின் மாற்றியமைக் கப்பட்ட எல்லை வரை விரிவாக்கம் செய்வது உகந்ததாகவேப் படுகிறது.

திருச்சபையின் தலைமைப்பீடத் தலைவர் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கீழே திருச்சபைத் திருப்பீடத்தின் தலைவர் கர்தினாள் மற்றும் மேன்மை தங்கிய வத்திக்கான் அரசுச் செயலர் ஆகியோரிடமிருந்து பெற்ற ஆலோசனைகளின் படி, தக்கலை மறைமாவட்டத்தின் எல்லையை, மதுரை, தேனி, விருதுநகர், சிவகங்கை, இராம நாதபுரம், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங் களை உள்ளடக்கியதாக விரிவு படுத்தப்படுகிறது. இவ்வாணை வழியாக, மேற்குறிப்பிட்ட பகுதிகளில் வாழும் அனைத்து சீரோ மலபார்த் திருச்சபை விசுவாசிகளும் தக்கலை மறைமாவட்ட ஆயரின் மேய்ப்புப் பணியின் கீழ் வருகிறார்கள்.

ஆகையால், திருச்சபை தலைமைப் பீடத்தின் அதிகார பூர்வமான இவ்வாணை வழியாக, தக்கலை மறைமாவட்டத்தின் எல்லையானது மேற்குறிப்பிட்ட பகுதிகளைக் கொண்டதாக மாற்றி அமைக்கப்பட்டு, நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகிறது.

இதற்கு எதிரான எவையும் நிலைகொள்ளா!

கீழேத் திருச்சபைகளுக்கான திருப்பீடம் உரோமையில் வைத்து, அக்டோபர் 09, 2017 அன்று வழங்கியது.

+லியனார்தோ கர்தினாள் சாந்திரி, திருப்பீடத் தலைவர்
உயர் பேராயர் சிரில் வாசில், செயலர்.

## BISHOP'S ENGAGEMENTS DECEMBER 2017

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1-2\|3 | Sun | 06.00 pm | Bp's House\|Mulagumoodu, inter-denomination prayer |
| 4 | Mon | 10.00am | Angelippa: First Death Annul. of Fr. Thomas Urumbical |
| 5\|6 | Tue | 06.00pm | Curia Meeting\| Edappalayam: Convention Qurbana |
| 8\|9 | Sat | | Sangamam: Diacon. Ord. of Bro. Dorathick\|Bp's House |
| 10 | Sun | 10.00am<br>02.00pm | Shembahatharisu Mission Inauguration Munchirai,<br>Mass for the Eugine Family \|Bro. Christudas: CD Release |
| 11-13 ,15 | | | Visiting Tamil Nadu Bishops |
| 14 | Thu | <br>07.00am | Death Anniversary of Fr. Thomas Thekkel<br>Edathua, Marattukulam: Death Anniversary Qurbana |
| 16 | Sat | 10.00am<br>02.00pm<br>05.00pm<br>06.30pm | Sangamam: Meeting with CRI Superiors<br>Christmas Celebration with Catechism Staff<br>Christmas Celebration with PRO and Well-wishers<br>Christmas Celebration at KKSS Kalluvilai |
| 17 | Sun | 07.00am | Killiyoor: Pastoral Visit |
| 18 | Mon | 04.00am<br>06.00pm | Nadaikkavu: Christmas Celebrat. of United Christians<br>Thuckalay: Christava Jenanayaga Peravai |
| 19 | Tue | 10.00am<br>04.00pm | Kottar: Christmas Celebration with United Christians<br>Priests' Sangamam with Pre-Christmas Celebration |
| 20 | Wed | 10.00am<br>05.00pm | Christmas Celebration with Institution heads<br>Christmas Celebration at Shenkottai Mission |
| 21 | Thu | 02.00pm | Marthandam: Christmas Celebration at CSI College<br>Minor seminary: Christmas celebration |
| 22 | Fri | 10.00am<br>12.00pm<br>04.00pm | Marthandam: Christmas Celebration at CSI Church<br>Bishop's House: Christmas Celebration with Staff<br>Nagercoil: Christmas Celebration with Alphonsa school |
| 23 | Mon | 12.00pm<br>05.00pm | Sangamam: Christmas cele. with Major Seminarians<br>Bp's House: Christmas cele. with neighborhood |
| 24 | Sun | 07.00pm<br>12.00 am | Visit of Fr. Salesian Provincial of Trichy<br>Athencode: Christmas Qurbana |
| 25\|26 | | 06.30pm | Visit to Religious Communities\| Engaged |
| 27 | Wed | 09.00am | CHRY: Ordination of Dn. Chacko Karingadu MCBS |
| 28 | Thu | 10.00am<br>03.00pm | Kattathurai: Marriage Blessing and Qurbana<br>Vattakottai: Qurbana and Blessing |
| 29 | Fri | 09.00am | Pilankalai: Church Blessing >> Kozhicode |
| 30\|31 | Sat | 10.30 am | Kozhicode: Marriage Blessing >> Thuckalay\|Bp's House |

Fr. Thomas Sathianesan |Eparchial Chancellor



Sr. Rani Maria FCC, Beatification,
Thanksgiving & Relics Installation, Thettiyode - 25.11.2017




Arputhar Garments, Vayalinkarai,
Blessing and Inauguration - 19.11.2017



TCYM, Manjalumoodu Forane Meet
25.11.2017

Diocesan Day 11.11.2017





Sevai Semmal Awardees 2017 | M. Salammal, Munchirai
Sr. John Berchmans S.H.

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570